**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No.2208/2022**
**Deposition of witness for prosecution –PW–2 (LW 3)**

| | | |
|---|---|---|
| Name | : | சிவப்பிரகாசம் |
| F/H Name | : | பூமிநாதன் |
| Village | : | தெய்வசிலை நல்லூர் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | தனியார் நிறுவனம் |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 24th day of June 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.
**(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 14.11.2020ம் தேதி மாலை 03.30 மணியை போல அ.சா.1, முகேஷ் கண்ணன் ஆகியோர்கள் பனைக்குளம் டாஸ்மாக் கடைக்கு சென்றுவிட்டு வரும்போது எதிரிகள் அ.சா.1 ஐ வழி மறித்து முன்விரோதம் காரணமாக கீழே கிடந்த கம்பை வைத்து தாக்கினார்கள் என்றால் சரியல்ல. அந்த வழியாக வந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும் அதன்பிறகு என்னிடம் சொன்னதால் என் தம்பியை அழைத்துக்கொண்டு 3 நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்று விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி</u>**

**நாங்கள் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றாலும் இந்த வழக்கை எங்களுக்கு மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை என்றாலும் சரிதான்.**

**மறு விசாரணை – இல்லை**

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.24 12:37:31 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No.2208/2022**
**Deposition of witness for prosecution –PW–3 (LW 7)**

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பையா |
| F/H Name | : | பெரியகருப்பன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 24th day of June 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது திரு உத்திரகோச மங்கை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திரு உத்திரகோசமங்கை காவல் நிலைய குற்ற எண் 126/2020 பிரிவுகள் 341, 294(b), 323 IPC ஆக பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் கோவிந்தராஜன் தற்போது பணி மாறுதலாகி வேறு காவல் நிலையத்தில் பணி புரிந்து வருகிறார். அவரது கையொப்பம் எனக்கு தெரியும். கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.11.2020 ம் தேதி மாலை 06.40 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 மணிகண்டன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பின்பு பார்வையிட்டு நிலைய குற்ற எண் 126/2020 பிரிவுகள் 341, 294(b), 323 IPC ஆக வழக்கு பதிவு செய்து புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவர் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2, புகார் மனு அ.சா.ஆ.3** ஆகும். பின்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன், கற்பகராஜா ஆகியோர் முன்னிலையில்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்பு சாட்சிகள் மணிகண்டன், முகேஷ்கண்ணன், சிவப்பிரகாசம், முருகேசன், கற்பகராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகளை 07.12.2020ம் தேதி உத்திரகோச மங்கை கோவில் அருகே கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு விசாரணை முடித்து எதிரிகள் மீது அதே பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய் புகாரை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரிகளின் மீது வழக்கு பதிவுசெய்து இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை—இல்லை.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.24 12:37:42 +0530